Praise the Lord:

கர்த்தருக்கென்று நாம் இந்த நேரத்தை கொடுப்போம். அவரது வேதத்தை வாசிப்போம். விசுவாசக்குடும்பத்தோடு சேர்ந்து கர்த்தரிடம் மன்றாடுவோம் என்ற வாஞ்சையோடு வந்திருக்கும் உங்களனைவரையும் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்தி கர்த்தர் இந்த சூழ்நிலையை நமக்கு கொடுத்ததற்காக கர்த்தருக்கு நன்றி சொல்கிறேன். ஆமென்.

பிலிப்பியர்/Philippians 1:21-24

கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்.
ஆகிலும் சரீரத்தில் பிழைத்திருக்கிறதினாலே என் கிரியைக்குப் பலனுண்டாயிருப்பதால், நான் தெரிந்துகொள்ளவேண்டியது இன்னதென்று அறியேன்.
ஏனெனில் **இவ்விரண்டினாலும் நான் நெருக்கப்படுகிறேன்;** தேகத்தைவிட்டுப் பிரிந்து, கிறிஸ்துவுடனேகூட இருக்க எனக்கு ஆசையுண்டு, அது அதிக நன்மையாயிருக்கும்;
அப்படியிருந்தும், நான் சரீரத்தில் தரித்திருப்பது உங்களுக்கு அதிக அவசியம்.

For to me, to live is Christ and to die is gain. If I am to go on living in the body, this will mean fruitful labor for me. Yet what shall I choose? I do not know! **I am torn between the two**: I desire to depart and be with Christ, which is better by far; but it is more necessary for you that I remain in the body. (NIV)

இயேசுகிறிஸ்துவிடம் அன்புகூறுகிற அளவிற்கு,
மக்கள் இந்த ஜீவனுள்ள வார்த்தையில் அன்புகூறுகிறார்களா?
என்பது ஒரு சிந்தனைக்கு உரியது. . . .

ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான் (யோவான் 14:23)
If anyone loves me, he will obey my teaching..

என்று வேதமே சொல்கிறது. இதை மக்கள் உணர்ந்தால், நாம் அன்புவைத்திருக்கிறவர் என்ன சொல்கிறார் என்பதை அறிந்து கொள்ள வாஞ்சைப்படுவார்கள்.

இந்த வாஞ்சை முதலில் வரவேண்டும். அதன்பிறகு அதைச் செய்ய நேரம்/சூழ்நிலை வரவேண்டும்.
வாஞ்சை இருந்தும் நேரம்/சூழ்நிலை இல்லாமல் சிலர் தவிக்கலாம். . . ..
24 மணிநேரம் கடவுள் கொடுத்தது ஒவ்வொரு நாளும் இருக்கிறது.
அது உலகத்தின் பல சூழ்நிலையினாலே ஆட்கொள்ளப்பட்டுள்ளது என்பதினாலே. . . . . .
பல வேளைகளிலே நாம் ஒன்றுக்கு மேலான காரியத்தில் நெருக்கப்படுகிறோம்.

மீண்டுமாக 23வது வசனத்தைமட்டும் வாசியுங்கள்.

ஏனெனில் **இவ்விரண்டினாலும் நான் நெருக்கப்படுகிறேன்**; தேகத்தைவிட்டுப் பிரிந்து, கிறிஸ்துவுடனேகூட இருக்க எனக்கு ஆசையுண்டு, அது அதிக நன்மையாயிருக்கும்;
அப்படியிருந்தும், நான் சரீரத்தில் தரித்திருப்பது உங்களுக்கு அதிக அவசியம்.

**I am torn between the two**: I desire to depart and be with Christ, which is better by far; but it is more necessary for you that I remain in the body. (NIV)

நாம் இப்போ வாசித்த வசனங்களிலே, இந்த உலக ஓட்டத்தை, விசுவாசத்தைக் காத்துக் கொண்ட வெற்றி ஓட்டமாக முடித்த பவுல், அவருக்கு ஏற்பட்ட ஒரு நெருக்கத்தைப் பற்றி குறிப்பிடுகிறார்.

For I am in a strait betwixt two….(KJV)
I'm torn between two desires….. (NLT)
I am hard-pressed between the two…. (NKJV)

**strait** A position of difficulty, perplexity, distress, or need. Often used in the plural., Difficult; stressful.. கடினமான, சங்கடமான

**hard-pressed** Experiencing great difficulty or distress.

**tear**, **torn** **1.** To pull apart or into pieces by force; rend. **2.** To make (an opening) by ripping. **3.** To lacerate (the skin, for example). **4.** To separate forcefully; wrench. **5.** To divide or disrupt. *கண்ணீர் விடு*

இவருடைய நெருக்கத்தைப் பற்றி சிந்திக்குமுன் நமது அன்றாட வாழ்க்கையில் 2 விதமான நெருக்கங்களை சிந்திப்போம்.. . .

## Let us Pray

**1. உலகத்தின் காரியங்களிலே நெருக்கம்.**

**இதைச் செய்வதா / அதைச் செய்வதா? இங்கு வாழ்வதா? அங்கு வாழ்வதா? இதை வாங்குவோமா? அதை வாங்குவோமா? இங்கே போவோமா? அங்கே போவோமா? இந்த விஷேடத்துக்கு போவோமா? அல்லது அந்த விசேடத்துக்கு போவோமா? எதைத் தெரிந்தெடுப்பது ? எதை விடுவது? . . . . .**

**இப்படியாக**

**உலகத்தின் காரியங்களிலே, நாம் ஒன்றுக்கும் மேலான சூழ்நிலைகளினாலே ஆட்கொள்ளாப்படும்போது, ஒன்றை மேன்மையானதாக கருதி எடுத்துக் கொள்கிறோம். மற்றதை விட்டுவிடுகிறோம்.**

நாம் எடுக்கும் முடிவெல்லாம் சரியா என்பது பல நேரங்களில், நமது சிந்தனைக்கும் அப்பாற்பட்டது.

சில நேரங்களிலே நமது உள்ளான இருதயத்தின் சிந்தனைகள் முடிவை நிர்ணயிக்கும்.

நமக்குள்ளே இருக்கிற நமது சொந்த விருப்பங்கள், நம் முடிவை நிர்ணயிக்கும்.

சில நேரங்களிலே சூழ்நிலைகள/மற்றவர்கள் ஆலோசனை முடிவை நிர்ணயிக்கும்.

சில நேரங்களிலே நம்மை அறியாமலே நாம் முடிவெடுப்போம்.. . . .

சில நேரங்களிலே நமக்கு அப்பாற்பட்ட ஒரு உந்துதலினாலே நாம் முடிவெடுப்போம்.

அதுவும் கிறிஸ்துவுக்குள் நாம் வாழும்போது, இயேசுகிறிஸ்துவின் ஆவியினாலே நாம் உந்தப்பட்டு முடிவெடுக்க ஆவியானவர் நமக்கு உதவி செய்வார்.

கிறிஸ்துவுக்குள் (அவரது வசனத்துக்குள்) இல்லாத வாழ்க்கையிலே இருப்பவர்களுக்குகூட அவர் மிகுந்த இரக்கத்தினால் உதவி செய்யலாம் அவர்கள் அதை புரிந்துகொள்ளமுடியாது.. அதை அவர்கள் உணர்ந்து அவருக்குள் வந்தால் அவரது மிகுந்த கிருபையும் அவர்களை ஆட்கொள்ளும். ஆமென்.

எது எப்படியாயினும் அது கர்த்தருக்கு சித்தமாயிருந்தால் அது ஆகும்; அது நன்மைக்கே. . . . ஆமென்.

மனுஷனுடைய இருதயத்தின் எண்ணங்கள் அநேகம்; ஆனாலும் கர்த்தருடைய யோசனையே நிலைநிற்கும். நீதிமொழிகள் 19: 21 என்று வேதம் சொல்கிறது

Many are the plans in a man's heart, but it is the LORD's purpose that prevails. (NIV)

There are many plans in a man's heart, Nevertheless the LORD's counsel—that will stand. (NKJV)

*இப்படியாக உலகத்தின் காரியங்களிலே நெருக்கப்படுகிறோம். . .*

*இன்னுமொரு நெருக்கம். . ..*

**2. கர்த்தருடைய காரியத்திலும் உலகத்து வாழ்க்கையின் காரியத்திலும் ஒரு நெருக்கம்.**

கடந்த வாரம் வேதப்படிப்பிற்கு வரவேண்டுமென்ற வாஞ்சை பலருக்கு இருந்திருக்கலாம்.

அதேசமயம் பலருக்கு வேறொரு காரியமும் வந்திருக்கலாம். . . . . .

இன்று ஜெபக்கூட்டத்திற்கு வரவேண்டும் நமக்காகவும் மற்றவர்களுக்காகவும் ஜெபிக்கவேண்டும் என்ற வாஞ்சை பலருக்கு இருந்திருக்கலாம்.

அதேசமயம் இன்னொரு அவசியமான காரியமும் வந்து இருக்கலாம்.. . . .

*இந்த இரண்டினால் நெருக்கப்பட்டு ஒன்றை விட்டு ஒன்றை எடுத்துக் கொள்கிறோம்.*

*எது நாம் மிக அவசியம் என நினைக்கிறோமோ அதையே எடுத்துக் கொள்கிறோம்.*

இங்கு வரக்கூடிய வாய்ப்பு நம் அனைவருக்கும் கிடைத்ததற்காக கர்த்தரை ஸ்தோத்திரிக்கிறேன்.

*இன்னொரு விதமாக சிந்தித்தால். . .*

*கர்த்தருக்காக நம்மை ஒப்புக்கொடுத்து வாழ்ந்தாலும். . .. .*

*இந்த உலகத்தின் அத்தியாவசிய காரியங்களினால், இப்படி ஒரு சில வேளைகள் கர்த்தருடைய காரியத்திற்கும் வர இயலாமல் இருக்கும். இதுதான் இந்த உலக வாழ்க்கையின் இயல்பு.*

*இந்த உலக வாழ்க்கையின் இயல்பிலிருந்து நாம் கொஞ்சம் கொஞ்சமாக விடுபட்டு கர்த்தருக்குள் முழுமையாக வருவது நம்மாலே கூடாத காரியமாக தோன்றினாலும், தேவனால் அது கூடும்.*

*அந்த விசுவாசத்தோடு ஜெபித்து . . .இப்படிப்பட்ட நெருக்கத்திலிருந்து விடுபட நாம் தேவனிடம் மன்றாடவேண்டும். ஆமென்.*

கடந்த வேதப்படிப்பிலே நாம் ரோமர் அதிகாரத்திலே படித்ததுபோல. . ..

கர்த்தரின் நியாயப்பிரமாணம், சாத்தானின் பாவப்பிரமாணம், நமது மனதின் சிந்தனையிலே உள்ள இன்னுமொரு பிரமாணம். . . இந்த 3 பிராமாணங்களினாலே நெருக்கப்படுகிற பவுலைப் பார்த்தோம்.

நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரணசரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்?
What a wretched man I am! Who will rescue me from this body of death?
*என்று புலம்பி அப்படியே குழப்பத்தில் வாழவில்லை*
நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய்த் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்.
Thanks be to God—through Jesus Christ our Lord!
**என்று கிறிஸ்துவிடம் சரணடைந்தார்.**
கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே.
through Christ Jesus the law of the Spirit of life set me free from the law of sin and death.
**என்று அவர் கிறிஸ்துவினாலே விடுவிக்கப்பட்டார். ஆமென்.**
**இப்படி நாம் கிறிஸ்துவோடு ஐக்கியப்பட்டு அவரது கிருபையிலே அவரோடு வாழ வாஞ்சைப்படும்போது, அவர் நம்மை விடுவிக்க வல்லவராயிருக்கிறார். ஆமென்.**

**அப்பொழுது நமக்கு வரும் நெருக்கங்கள் வித்தியாசம்.**

**அந்த நெருக்கம் நம்மை அவருக்குள் மேலும் மேலும் நெருக்கும்**

*அப்படிப்பட்ட ஒரு நெருக்கத்தைத்தான் நாம் வேதத்தில் வாசித்தோம்*

**3. கர்த்தருடைய காரியத்திலே உண்டான நெருக்கம்.**

**மீண்டுமாக** பிலிப்பியர்/Philippians 1:21-24

கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்.
ஆகிலும் சரீரத்தில் பிழைத்திருக்கிறதினாலே என் கிரியைக்குப் பலனுண்டாயிருப்பதால், நான் தெரிந்துகொள்ளவேண்டியது இன்னதென்று அறியேன்.

**ஏனெனில் இவ்விரண்டினாலும் நான் நெருக்கப்படுகிறேன்; தேகத்தைவிட்டுப் பிரிந்து, கிறிஸ்துவுடனேகூட இருக்க எனக்கு ஆசையுண்டு, அது அதிக நன்மையாயிருக்கும்; அப்படியிருந்தும், நான் சரீரத்தில் தரித்திருப்பது உங்களுக்கு அதிக அவசியம்.**

**(கிறிஸ்துவுடனே கூட இருக்க ஆசை இருக்கிறது. அதைவிட (கிறிஸ்துவுக்காக) மற்றவர்களுக்காக வாழ்வது அதிக அவசியம் என்று சொல்கிறார்.)**

**ஆசையைவிட அவசியம் முக்கியம். சிந்தித்துப் பாருங்கள்.**

For to me, to live is Christ and to die is gain. If I am to go on living in the body, this will mean fruitful labor for me. Yet what shall I choose? I do not know!
**I am torn between the two**: I desire to depart and be with Christ, which is better by far; but it is more necessary for you that I remain in the body. (NIV)

**கிறிஸ்துவுக்காக வாழ்ந்த, அந்த வாழ்க்கையின் முடிவில் கிறிஸ்துவுடன் இன்றும் வாழ்கிறார்.**
**அவருக்கு வந்த 2 நெருக்கத்தில் ஒன்றை விட்டு ஒன்றை எடுக்கவில்லை.**

**அவசியமானதை முதலில் முடித்தார்,**

**அதன்பிறகு அவரது ஆசையானது நிறைவேறியது.**

**இப்படித்தான் நமது நெருக்கமும் இருக்கவேண்டும். கர்த்தரிடம் மன்றாடுங்கள்.**

அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்; ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன். (2 கொரிந்தியர் 12:10)
That is why, for Christ's sake, I delight in weaknesses, in insults, in hardships, in persecutions, in difficulties. For when I am weak, then I am strong.
**என்ற வசனத்தை உற்சாகமாக சொல்லக்கூடிய வகையில் நாம் பக்குவப்படவேண்டும்.**

**நாம் அவருக்குள் பரிசுத்தப்பட பரிசுத்தப்பட. . . .**

கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது; (2கொரி 5:14)

For Christ's love compels us **என்ற வசனம் நமக்குள் கிரியை செய்தால். .. .**

நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை; கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை; (2கொரி 4:8) **என்ற வசனம் நம்மிலே ஜீவிக்கும். ஆமென்.**
We are hard pressed on every side, but not crushed; perplexed, but not in despair

**வசனங்களை நாம் படிக்க படிக்க, தியானிக்க, தியானிக்க. . . .**
நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டேன். (பிலி. 4:11)
I have learned to be content whatever the circumstances.
**என்று சொல்ல நாம் பக்குவப்படவேண்டும்.**

அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம். (ரோமர் 8:28)
And we know that all things work together for good to those who love God, to those who are the called according to His purpose. (Romans 8:28)

**நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, நமது ஒவ்வொருவருடைய இருதயங்களையும் தேற்றி, எல்லா நல்வசனத்திலும் நற்கிரியையிலும் நம்மை ஸ்திரப்படுத்துவாராக. ஆமென்.** (2தெச 2:17)
encourage your hearts and strengthen you in every good deed and word.

**<u>Let us pray</u>**